1995 நவம்பர் 7]

25 வருடங்களாக ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. தற்போது இந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில், மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதன் காரணமாக தற்போது ஊர் மக்கள் ரூ.10,000/- கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஏற்கனவே இந்தக் கட்டிடத்தை ஊர்ப் பொது மக்கள் தானமாக வழங்கியிருப்பதால் ரூ.10,000/-ஐ மட்டும் கட்டினால் அரசு நடவடிக்கை எடுத்து கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக புறம்போக்கு நிலம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும் என்று சொல்லி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தை அரசு அதிகாரிகள் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஊர் மக்களின் சார்பாக அதன் 10,000/- ரூபாயை மட்டும் நன்கொடையாகக் கட்டிவிட்டால் அரசாங்கம் மற்ற பணிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

25—

திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த வங்கி அமைத்தல்

***44963** திரு. எம். பூராசாமி:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த சேமிப்பு வங்கி மற்றும் கதிர் இயக்கப் பிரிவு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கதிரியக்கப் பிரிவு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மட்டுமே அமைக்கப்படுகிறது. திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையம்

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமல்ல. எனவே அங்கு கதிரியக்கப்பிரிவு அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு வங்கியும் நிறுவிட சாத்தியமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காடு பகுதி, பூம்புகார் தொகுதியிலும், சீர்காழி தொகுதியிலும் உள்ள பல பகுதிகளையும் உள்ளடக்கியது. அந்தத் திருவெண்காட்டில் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கப்பட வேண்டும். மக்கள் நலனைப் பேணிக் காக்கும் டாக்டர் புரட்சித்தலைவி அரசில் உடல் நலம் சுகாதாரமாக இருக்கவேண்டுமென்ற புரட்சித் தலைவி அரசில் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இந்தப் பொருளாதாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் உடனடியாகத் திருவெண்காட்டுப் பகுதியிலே இந்தக் கதிரியக்கப் பிரிவு இந்த ஆண்டே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் பிரச்சனை என்று நான் சொல்லவில்லை. ஆரம்ப சுகாதார நிலையத்தில் கதிரியக்கப் பிரிவோ, இரத்த சேமிப்பு வங்கியோ அமைப்பது சாத்தியக்கூறு அல்ல. இதிலே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்று இருக்கிறது. அங்கே மட்டும் கதிரியக்கப் பிரிவு அமைக்கப்படுகிறது. எனவே, இந்தப் பகுதியிலே உள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அந்த வாய்ப்பு இல்லை. அருகாமையிலே எந்தப் பகுதியிலே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறதோ அங்கே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்.

திரு.எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காடு பகுதி ஏழை எளிய மக்கள், மீனவப் பெருங்குடி மக்கள் மற்றும் ஆதிதிராவிடர் நிரம்பிய பகுதி. அந்தப் பகுதியிலே இடவசதிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, உடனடியாக இந்தக் கதிரியக்கப்பிரிவை நீங்கள் சொல்லுகின்ற அளவுக்கு மேம்பாடு செய்து, அதற்கான தக்க நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஆண்டிலே இந்தக் கதிரியக்கப்பிரிவை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிளாக்கிற்கு ஒரு பிஎச்சி. மட்டும்தான் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. எனவே, இந்த பிளாக்கிற்கு

1995 நவம்பர் 7]

வேறு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அதற்கான வாய்ப்பு இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை வைத்து ஆய்வு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

26—

தருமபுரி - கோலார் தங்கவயல் பேருந்து இயக்குதல்

***33002*—திரு. கே. ஏ. மனோகரன் :**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து கோலார் தங்கவயலுக்கு (K.G.F.) கிருஷ்ணகிரி, சூளகிரி, பேரிகை வழியாக விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தடத்தினை கர்நாடக அரசின் ஒப்புதலுடன்தான் இயக்கப்பட வேண்டும். தமிழகத்திற்கும் கர்நாடக மாநில அரசிற்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும்பொழுது இத்தடத்தினை இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி - கோலார் தங்கவயல் பகுதிக்கு கிருஷ்ணகிரி, சூளகிரி, பேரிகை மற்றும் பங்காருபேட்டை வழியாக விடப்படுகின்ற அரசுப் பேருந்து இரண்டு மாநில எல்லைகளை ஒட்டி வருகின்றது. ஏறத்தாழ இரண்டு லட்சம் தமிழர்கள் இந்தப் பகுதியிலே விவசாயம் மற்றும் வேறு பல வேலைகளை செய்துகொண்டு வருகிறார்கள். அப்பகுதி மக்கள் அடிக்கடி தமிழகத்திற்கு வரவும், இங்கே உள்ளவர்கள் அடிக்கடி அங்கு செல்ல வேண்டியிருப்பதால், இந்தத் தடத்தினை முன்னுரிமை கொடுத்து கர்நாடக அரசிடம் அனுமதி பெற்று இத்தடத்தினை இயக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.